විදේශ කටයුතු, විදේශ රැකියා සහ සංචාරක අමාත්‍යාංශය
வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு
MINISTRY OF FOREIGN AFFAIRS, FOREIGN EMPLOYMENT AND TOURISM

**ஊடக வெளியீடு**

# பொருளாதார இராஜதந்திர கூட்டாண்மைகளை வலுப்படுத்துமுகமாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு ஏற்பாடு செய்த வலையமைத்தலுக்கான சுமுக ஒன்றுகூடல்

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு, தனது பொருளாதார இராஜதந்திர திட்டத்தின் கீழ், வெளிநாட்டு தூதுவர்கள், சிரேஷ்ட அரச அதிகாரிகள், வர்த்தக சபை பிரதிநிதிகள் மற்றும் தனியார் துறையினரை ஒன்றிணைக்கும் வலையமைத்தலுக்கான சுமுக ஒன்றுகூடல் நிகழ்வொன்றை 2026 ஜூன் 08 அன்று லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவகத்தில் ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிகழ்வில் உரையாற்றிய வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறைப் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர, மேலும் பயனுறுதிப்பாடுமிக்க பொருளாதார இராஜதந்திர பெறுபேறுகளை அடைய, தூதரகங்கள், அரசு நிறுவனங்கள் மற்றும் வர்த்தக சமூகம் ஆகியவற்றுக்கு இடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். பொருளாதார ஒத்துழைப்பிற்கு ஒரு வசதியளிப்பவராகவும், ஊடகமாகவும், மற்றும் வழிவகுப்பவராகவும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் வகிபாகத்தை வலியுறுத்திய அவர், ஆக்கப்பூர்வமான கூட்டாண்மைகளை வளர்ப்பதற்கும், தரமான முதலீடு மற்றும் வர்த்தக வாய்ப்புகளை எளிதாக்குவதற்கும் தேவையான ஆதரவையும், உதவியையும் வழங்குவதில் அமைச்சின் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்தினார். நன்கு வடிவமைக்கப்பட்ட பொருளாதார இராஜதந்திர முயற்சிகளாவன, நாட்டின் வெளியுறவுக் கொள்கைக்கும் உள்நாட்டு வளர்ச்சி முன்னுரிமைகளுக்கும் இடையே ஒரு பாலமாகச் செயற்படுவதன் மூலம் சர்வதேச ஈடுபாடு நாட்டிற்கு உறுதியான பொருளாதார நன்மைகளை வழங்க உதவுகிறது என்று பிரதி அமைச்சர் எடுத்துரைத்தார்.

கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்திக்கான பிரதி அமைச்சர் சத்துரங்க அபேசிங்ஹ தனது உரையில், பல்வேறுபட்ட துறைகளில் இலங்கையின் வலுவான ஆற்றலை வலியுறுத்தி, வர்த்தகம், முதலீடு மற்றும் பொருளாதாரக் கூட்டாண்மைக்கு கவர்ச்சிகரமானதொரு சுற்றுலாத்தளமொன்றாக நாட்டின் தனித்துவமான சிறப்பினை அடிக்கோடிட்டுக் காட்டினார்.

உத்தியோகபூர்வ நிகழ்வுகளைத் தொடர்ந்து, பங்கேற்பாளர்களிடையே கருத்துப் பரிமாற்றம், சாத்தியமான கூட்டாண்மைகளை ஆராய்தல் மற்றும் தொழில்முறை மற்றும் நிறுவன உறவுகளை வலுப்படுத்துவதற்கு வழிவகுக்கும் வகையிலானதொரு வலையமைத்தலுக்கான சுமுக ஒன்றுகூடல் நிகழ்வு நடைபெற்றது.

அரசாங்கம், வணிகம் மற்றும் இராஜதந்திர சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் 100 பங்கேற்பாளர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். இது பொருளாதார இராஜதந்திரத்தின் வளர்ந்து வரும் முக்கியத்துவத்தையும், இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஆதரவாக ஒத்துழைப்பை வலுப்படுத்துவதில் பங்குதாரர்களின் பகிரப்பட்ட அர்ப்பணிப்பையும் பிரதிபலிக்கிறது.

**வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு**
**மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு**
**கொழும்பு**

**2026 ஜூன் 11**


| | | | |
|---|---|---|---|
| **Foreign Affairs**<br>විදේශ කටයුතු<br>வெளிநாட்டு அலுவல்கள் | **Republic Building, Colombo 1**<br>ජනරජ ගොඩනැගිල්ල, කොළඹ 1<br>குடியரசுக் கட்டிடம், கொழும்பு 1 | 2 325 373/5, 2 207 200/7 | cypher@mfa.gov.lk |
| **Foreign Employment**<br>විදේශ රැකියා<br>வெளிநாட்டு வேலைவாய்ப்பு | **17th Floor, "Mehewara Piyesa", Narahenpita, Colombo 5**<br>17 වන මහල, "මෙහෙවර පියස", නාරාහේන්පිට, කොළඹ 5<br>17 அவது தளம், "மெஹெவர பியெச", நாரஹேன்பிட்டி, கொழும்பு 5 | 2 331 200 | info@mfe.gov.lk |
| **Tourism**<br>සංචාරක<br>சுற்றுலாத்துறை | **No 03, Times Building, Bristol Street (Sir Razik Fareed Mw), Colombo 1**<br>අංක 03, ටයිම්ස් ගොඩනැගිල්ල, බ්‍රිස්ටල් වීදිය (සර් රාසික් ෆරීඩ් මාවත), කොළඹ 1<br>இல.03, டைம்ஸ் கட்டிடம், பிரிஸ்டல் தெரு (சர் ராசிக் ஃபரீத் மாவத்தை), கொழும்பு 1 | 2 381 798, 2 321 222 | secretary@tourismmin.gov.lk |